முருகப்பெருமான் துணை

ஆசான் அரங்கமகா ஞானியர்க்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1384

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.07.2023, வெள்ளிக்கிழமை

1. ஞானிகள் பலம் கொண்ட அரங்கனே
ஞானவான்கள் துணைகொண்ட தேசிகனே
வானவர்கள் போற்றுகின்ற வள்ளலே
வையகத்தைக் காக்கின்ற தர்மனே
2. தர்மனே கலியுகத்தின் அரங்கனே
தவசியாக வந்து காக்கும் குருராஜனே
அவதாரம் என்சக்தியாக நீ இருக்க
ஆறுமுகன் யான் உன்னுள் கலந்திருந்து
3. இருந்துமே உலக மாற்றம் நடத்துவேன்
இனிதே அரங்கன் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசிதன்னை
பலமுற சோபகிருது மிதுனத்திங்கள்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 29ம் நாள், 14.07.2023, வெள்ளிக்கிழமை)
பாருலகில் அரங்கன் சக்தி பெருக எடுத்துரைப்பேன்
4. உரைக்கவே அரங்கனே கலியின் மாதவசி
உண்மைப்பொருள் உணர்த்தும் மகாயோகி
குறையின்றி அரங்கன் தர்மத்தை
குவலயத்தார் ஏற்று செய்துவந்தால்
5. நிறைவான ஞான உலகமாக
நிலவுலகம் மாற்றம் பெறக்கூடும்
கூடவே அரங்கன் தொண்டர்களாக
குவலயத்தில் மக்கள்படை பெருகப்பெருக
6. நாடெங்கும் ஞானவான்கள் ஆட்சி
ஞானிகளாட்சிக் காலமாகவும்
ஆகவே மாற்றங்கண்டு இனிதே
அற்புதம் இந்த உலகம் அடையக்கூடும்

7. ஏற்புகொண்டு அரங்கன் தர்மத்தோடு
இனிதே காட்டும் சன்மார்க்க நெறிவழி மாற்றம் கருதிஉலகோர்
இணைந்து வந்தால் மக்களுக்கு மகான்களின் ஆட்சி
மகத்துவமிக்க ஞானிகள் ஆட்சி அரங்கேறும்
8. அரங்கேற அரங்கனே தொண்டர்களை
அழியாமைத் தந்து ஆக்கமுடன் உருவாக்கிவர
வரமாகக் கருதி உலகமக்கள்
வணங்கி பிரணவக்குடில் நோக்கி வந்தால்
9. வந்தவுடன் உலகுக்கு மாற்றம்
வளர்ச்சி கொண்ட நல்ல நிலைகளுமாக
சிந்தை தெளிவோடு அவரவர் சிறப்பறிவு கூடி
சித்திகண்டு ஞானிகளாகவே இந்த பேருலகில் சேவையாற்றி அற்புதம் காணக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–